**செய்தி வெளியீடு எண் : 1352** **நாள் : 10.07.2023**

## வேளாண்மை–உழவர் நலத்துறை

## 2023–ஜூலை 27 முதல் 29 வரை திருச்சியில் மாநில வேளாண்மை கண்காட்சி (வேளாண் சங்கமம்)

கடந்த மூன்று ஆண்டுகளாக வேளாண்மைக்கான தனி நிதிநிலை அறிக்கையின் மூலம் பல நூறு திட்டங்கள் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டுள்ளது. 2023–24ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையில் நவீன தொழில்நுட்பங்கள், புதிய இரகங்கள், வேளாண் இயந்திரங்கள், மதிப்புக்கூட்டும் தொழில்நுட்பங்கள் குறித்த விழிப்புணர்வை விவசாயிகள், கல்லூரி மாணவர்கள், பொதுமக்கள், உணவு பதப்படுத்துபவர்கள், ஏற்றுமதியாளர்களிடையே ஏற்படுத்தும் வகையில், 2023–24 ஆம் ஆண்டில் மாநில வேளாண் கண்காட்சி திருச்சியிலும், உழவர் உற்பத்தியாளர்கள் நிறுவனங்கள், வாழை மலர்களுக்கான கண்காட்சி சென்னையிலும், பலாவுக்கான கண்காட்சி பண்ருட்டியிலும் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டது.

கடந்த 8.07.2023 மற்றும் 9.07.2023 ஆகிய தேதிகளில் சென்னையில் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கான கண்காட்சி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் துவங்கி வைக்கப்பட்டது. வேளாண் வணிகத் திருவிழா 2023 மிக வெற்றிகரமாக நடைபெற்றது. இதில் ரூபாய் 2.5 கோடி மதிப்பிலான மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் விற்பனை ஆகியுள்ளது. அச்சமயம், இது போன்ற கண்காட்சிகள் விவசாயிகளுக்கு பயன்பெறும் வகையில் நடத்தப்பட வேண்டுமென்று அறிவுறுத்தினார்கள்.

இதன் தொடர்ச்சியாக, சூலை 27ஆம் தேதி முதல் 29ஆம் தேதி முடிய திருச்சியில் மாநில வேளாண் கண்காட்சி (வேளாண் சங்கமம்) நடைபெறும். இதற்கான முன்னேற்பாடுகள் குறித்த கூட்டம் இன்று (10.07.2023) தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் விவசாயிகளுக்கு தேவைப்படும் விதைகள், தென்னங்கன்றுகள் மற்றும் பழமரக்கன்றுகள் ஆகியவற்றை காட்சிப்படுத்துவதுடன், அவற்றை விற்பனை செய்வதற்கான ஏற்பாடுகளை செய்திட வேண்டும் எனவும், விவசாயிகளுக்கு தேவைப்படும் அனைத்து வேளாண் இயந்திரங்களையும் காட்சிப்படுத்தி நடவடிக்கை எடுத்திட வேண்டும் எனவும், விவசாயிகளுக்கான அனைத்து திட்டங்களைப் பற்றியும் தெரிந்து கொள்ளும் வகையில் கண்காட்சி அமைத்திட வேண்டும் எனவும், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் தங்கள் மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களை விற்பனை செய்திட நடவடிக்கை எடுத்திட வேண்டும் என அறிவுறுத்தினார். அதிக அளவில் விவசாயிகள் கலந்து கொண்டு பயன்பெற்றிட நடவடிகக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்கள்.

விவசாயிகளுக்கான புதிய தொழில்நுட்பங்கள், மின்னணு விற்பனை, வேளாண் காடுகள், உயரிய தோட்டக்கலை தொழில்நுட்பம், நவீன வேளாண் இயந்திரங்கள், வேளாண் ஏற்றுமதி போன்ற தலைப்புகளில் கருத்தரங்கம் நடத்தப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர் திரு.சி.சமயமூர்த்தி, இ.ஆ.ப., வேளாண்மைத்துறை ஆணையர் முனைவர் இல.சுப்பிரமணியன், இ.ஆ.ப., சிறப்புச் செயலாளர் முனைவர் இரா.நந்தகோபால், இ.ஆ.ப., வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை இயக்குநர் முனைவர் எஸ்.நடராஜன், இ.ஆ.ப,. தமிழ்நாடு நீர்வடிப்பகுதி முகமையின் செயல் இயக்குநர்(பொ) திரு. த.அன்பழகன், இ.ஆ.ப,. தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் மருத்துவர் ஆர்.பிருந்தாதேவி, இ.ஆ.ப., வேளாண் பொறியியல்துறை தலைமைப் பொறியாளர் திரு.இரா.முருகேசன் மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in